**செ.வெ.எண்: 01** **நாள்: 01.09.2021**

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள உயர் நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் இன்று திறக்கப்பட்டதையொட்டி அடிப்படை வசதிகள் மற்றும் கொரோனா நோய்தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் இன்று (01.09.2021) திறக்கப்பட்டதையொட்டி அடிப்படை வசதிகள் மற்றும் கொரோனா நோய்தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

கொரோனா நோய் தொற்று காரணமாக தமிழக முழுவதும் பள்ளி கல்லூரிகள் தற்காலிகமாக மூடப்பட்டது. தற்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் உத்தரவின்படி இன்று 01.09.2021 நாகப்பட்டினம் மாவட்டத்தில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு பள்ளிகள் திறக்கப்பட்டன.

நாகப்பட்டினம் மாவட்டம் அக்கரைப்பேட்டை அரசினா் மேல்நிலைப்பள்ளி நாகூர் தேசிய மேல்நிலைப்பள்ளி, நாகூர் அரசினா் உயர்நிலைப்பள்ளி, நாகூர் மாடர்ன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் அடிப்படை வசதிகள், வகுப்பறைகள் மற்றும் சமையல் கூடத்தினையும், மேலும் மதிய உணவிற்கு தேவையான அரிசி, பருப்பு போன்றவைகளையும் மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் உத்தரவின்படி இன்று பள்ளிகள் திறக்கப்பட்டன. வாரத்தின் 6 நாட்கள் பள்ளி வேலைநாட்களாக செயல்படும். 9ஆம் வகுப்பு மற்றும் 11ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சுழற்சி முறையில் வகுப்புகள் நடைபெறும். 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு தினமும் வகுப்புகள் நடைபெறும். ஒவ்வொரு வகுப்பறைகளும் 20 மாணவர்கள் மட்டுமே சமூக இடைவெளியுடன் அமர வேண்டும். மாணவர்கள் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும். வகுப்பிற்கு செல்வதற்கு முன் கைகளை கட்டாயமாக கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். மாணவர்களுக்கு நாள்தோறும் உடல் வெப்பநிலையை பரிசோதிக்க வேண்டும். மதிய உணவினை மாணவர்கள் சமூக இடைவெளியுடன் அமர்ந்து உண்ண வேண்டும், மாணவர்களின் பெற்றோர்கள் அனைவரும் கோவிட்-19 தடுப்பூசி செலுத்தி கொள்ள வேண்டும்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள 143 அரசு பள்ளிகளில் அரசு வழிகாட்டு நெறிமுறைகள் பள்ளிகளில் பின்பற்றப்படுகிறதா என்பது குறித்து ஆய்வு செய்வதற்காக கண்காணிப்பு மற்றும் பொறுப்பு அலுவலா்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மாவட்ட வருவாய் அலுவலா் மற்றும் வருவாய் கோட்டாட்சியா்கள் தலைமையில் இன்று அனைத்து பள்ளிகளிலும் பள்ளிகளுக்கு வரும் மாணவ மாணவியா்கள் முகக்கவசம் அணிந்து, அடிக்கடி கைகளை சோப்பு போட்டு கழுவுதல், சமூக இடைவெளியினை கட்டாயம் பின்பற்றுதல் உள்ளிட்ட கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடித்தல், மாணவர்களுக்கு குடிநீா் வசதி மற்றும் அனைத்து அடிப்படை வசதிகளையும் கண்காணிப்பு குழுக்கள் ஆய்வு செய்கின்றனர். முன்னதாக அக்கரைப்பேட்டை அரசினா் மேல்நிலைப்பள்ளியில் மரக்கன்றினை நட்டார். மேலும் மாணவர்களுக்கு தேவையான பேருந்து வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது எனவும் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**